# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2023 சுறவம் (பிப்.—92) விலை உருபா 1-50 (இதழ் எண் : 151)


## எளிதாகத் தீர்க்கப்பட வேண்டிய காவிரி நீர்ச் சிக்கலை - இனச் சிக்கலாக மாற்றி விட்டார் பங்காரப்பா...!

# இனி, தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால்தான் தமிழர்கள் வாழ முடியும்!

## 6-1-92 'சத்ரியன்' இதழ்க்கு அளித்த நேருரையில் பாவலரேறு !

தமிழர்களும் தமிழ்நாடும் எந்த வகையிலும் வளம் பெறவும் கூடாது... முன்னேறி விடவும் கூடாது என்பதுதான் இப்பொழுதைய தில்லி அரசின் எண்ணமாகும்.

பார்ப்பனியமும் முதலாளியமும் சேர்ந்து இயங்குவதே தில்லி ஆட்சி...! அதற்கு இந்தியாவில் உள்ள எந்த மாநிலமும், எந்தத் தேசிய இனமும் எந்த நிலையிலும் வலுப்பெற்றுவிடக் கூடாது என்பதே உட்கருத்தாகும்.

அவ்வாறு வலுப்பெறுமானால் அந்த மாநிலமும் அந்தத் தேசிய இனமும் தன் அதிகாரக் கட்டுக்குள் இல்லாமற் போய்விடுமே... என்பதுவே தில்லியரசின் கவலை! கரவான எண்ணம்...! .

இதற்கு உகந்தவராக, தில்லி அரசுக்கு, அஃதாவது இந்திராபேராய (காங்கிரசு)க் கட்சிக்குக் கிடைத்தவர்தாம் பங்காரப்பா...!

இவர் 1990 அக்டோபரில், வீரேந்திர பாட்டீல் விலக்கப்பட்டதைத் தொடர்ந்து பதவிக்கு வந்தவர். எல்லா நிலைகளிலும் இவர் தமிழர்களுக்கு நேர் எதிரானவர். இதற்கு முன்னர் இருந்த முதல்வர்களைக் காட்டிலும் இவர் பெரும் கன்னட வெறியர். இவர் பதவிக்கு வந்த பின் கர்நாடகத்தில் வாழும் தமிழர் முன்னேற்றத்தில் ஒரு கண்ணாக இருந்து அவர்களைப் பலவகையிலும் ஒடுக்க முற்பட்டார்.

பணி நிலைகளில் தமிழர்களுக்குக் கிடைத்து வந்த வாய்ப்புகளைக் குறைத்தார். கல்வி நிலையிலும் தமிழ்க்கல்வியைப் பின்தள்ளிக் கன்னட மொழிக்கே அனைத்து வாய்ப்புகளையும் உருவாக்கித் தந்தார். கன்னடம் படித்தவர்க்கே அரசு வேலை வாய்ப்புகளை உருவாக்கினார். தமிழர்கள் புதுத் தொழில் தொடங்குவதற்கும் வாணிகம் செய்வதற்கும் பல முட்டுக் கட்டைகளைப் போட்டார்.

எனவே, தமிழர்கள் அங்குப் பலவகையிலும் தொல்லைகளே பெற்று வந்தனர். அவர்கள் வீடுகள் கட்டவும், நிலங்கள் வாங்கவும் வாய்ப்பின்றி மிகவும் இடர்பட்டு வந்தனர் அதனால் நூற்றுக்கணக்கான தமிழர்கள் பெங்களூரை விட்டே வெளியேறிப் போயினர்.

பங்காரப்பா ஆட்சிக்கு வந்ததும், தமிழகத்திலும் ஆட்சி மாறியது. செயலலிதா தாம்

பதவிக்கு வந்த பின், முன்பு விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழப் போராட்டத்திற்கும் ஆதரவாயிருந்த நிலையை மாற்றிக் கொண்டு, அவர்களை ஒடுக்கும் செயலிலும், அவர்களை அறவே தமிழகத்திலிருந்து வெளியேற்றும் நிலையிலும் பெரு முனைப்புக் காட்டினார்.

காரணம் விடுதலைப் போராளிகள் எங்கு தி.மு.க.வுக்கு ஆதரவாக இருந்து தம்மைக் கவிழ்த்து விடுவார்களோ அல்லது அழித்து விடுவார்களோ என்று அஞ்சினார். எனவே, அவர்களுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார்.

இந்நடவடிக்கைகள் கர்நாடகத்திலும் குறிப்பாகப் பெங்களூரிலும் விரிவடைந்த பொழுது, பங்காரப்பா செயலலிதாவிற்கு அனைத்து வகையிலும் துணையாக இருந்தார்.

இருவரும் கன்னடத் தாய்மொழியினர்... ஆகையால், தமிழீழ எதிர்ப்பு முயற்சிகளைக் கைகோத்துக் கொண்டு செயல்படுத்தினர். போராளிகள் பலரைப் பெங்களூரிலிருந்து சிறைப் பிடிக்கவும் அழிக்கவும் கர்நாடக முதல்வர் பங்காரப்பா, தமிழக முதல்வர் செயலலிதாவிற்குப் பெரிதும் துணையாக நின்றார்.

இதற்கிடையில்தான் ஏற்கனவே இருந்த காவிரி நீர்ச்சிக்கலும் பெரியளவில் உருவெடுத்தது.

இதன் உண்மையான சிக்கல் என்ன? அது பற்றிச் சிறிதேனும் மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக, சில வரலாற்று நிலைகளை இங்குக் கூறியே ஆதல் வேண்டும்.

காவிரி கர்நாடகத்தில் உள்ள குடகு மாவட்டத்தில், குடகு மலையில் தோன்றிக் கர்நாடகம் வழியாகத் தமிழ்நாட்டில் பாய்ந்து, தஞ்சை மாவட்டத்தைத் தாண்டி வங்காளக் குடாக் கடலில் கலக்கிறது.

அதன் மொத்த நீளம் ஏறத்தாழ 500 கற்கள் (800 கி.மீ) இதில் 200 கற்கள் கர்நாடகத்திலும், 261½ கற்கள் தமிழ் நாட்டிலும், 52 கற்கள் இரண்டு மாநிலங்களுக்கு இடையில் எல்லையாகவும் அமைந்திருக்கின்றன.

இதனுடன் எட்டு கிளையாறுகள் இணைகின்றன. இவற்றுள் ஏமாவதி, ஆரங்கி, இலட்சுமண தீர்த்தா, கபினி, சுவர்ணவதி ஆகிய ஐந்தும் கர்நாடகத்திலும், பவானி, நொய்யல், அமராவதி ஆகியவை தமிழ்நாட்டிலும் பாய்கின்றன.

இவற்றுள் கபினி, அமராவதி, பவானி, ஆகிய மூன்றும் கேரளத்தில் தோன்றிக் கர்நாடகம் வழியாகக் கபினியும், தமிழ்நாடு வழியாகப் பவானியும் அமராவதியும் காவிரியுடன் கலக்கின்றன.

காவிரியில் ஓடுகின்ற தண்ணீர் குடகிலிருந்தே வந்துவிடாமல், இடையில் அதனுடன் வந்து கலக்கின்ற மேற்கூறிய சிற்றாறுகளின் தண்ணீருமாகும். இந்த வகையில் அதில் பாய்வதாகக் கணக்கிடும் 79,200 கோடி கன அடி தண்ணீரில் (74000 கோடி க.அ. தண்ணீர் என்பதும் ஒரு கணக்கு). கர்நாடகம் 38,800 கோடி க.அ. (388 டி.எம்.சி.) நீரும், தமிழ்நாடு 21700 கோடி க.அ. (217 டி.எம்.சி.) நீரும், கேரளம் 12510 கோடி க.அ. (125 டி.எம்.சி.) நீரும், அஃதாவது கர்நாடகம் 53%, தமிழ்நாடு 30%, கேரளம் 17% காவிரியாற்றுக்குத் தண்ணீர் தருவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இந்தத் தண்ணீரைக் கர்நாடகமும் கேரளமும் தென்மேற்குப் பருவ மழையாலும், தமிழ்நாடு வடகிழக்குப் பருவ மழையாலும் தருவதாகக் கணக்கிடப் பெற்றுள்ளது.

எனவே, காவிரி நீர் கர்நாடகம், தமிழ்நாடு, கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களும் பகிர்ந்து கொள்ள ஞாயம் உண்டு என்னும் நிலையில், இந்நீர்ப் பகிர்வு ஒப்பந்தம், முதன் முதலில் 1892-ஆம் ஆண்டிலும், அதன்பின் அது சில திருத்தங்களுடன் 1924-ஆம் ஆண்டிலும் அன்றைய மைசூர் அரசும், சென்னை மாகாண அரசும் செய்துகொள்ளப்பெற்றது.

இந்த ஒப்பந்தம், மேலும் கர்நாடகத்தில் மைசூரில் 1924-இல் ஓர் அணையும், தமிழகத்தில் மேட்டூரில் 1934-இல் ஓர் அணையும் கட்டிக் கொள்ளவும் வழிவகுத்தது.

இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுதும், அதன்பின்னர் 1956-இல் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்ட பொழுதும், கர்நாடக, தமிழ்நாடு, கேரள மாநிலங்களின் அமைப்பு நிலைகள் வேறு வேறு. எல்லைகளும் மாறின. நில அமைப்பு மாறுபாடுகளும் எல்லை மாற்றங்களும் ஒப்பந்தத்தில் சில சிக்கல்களை உருவாக்கிவிட்டன.

அதன்பின்னர் தமிழ்நாடு பவானி ஆற்றுக்குக் குறுக்கேயும், கர்நாடகம் கபினி ஆற்றுக்கு குறுக்கேயும், ஒவ்வோர் அணையைக் கட்டிக் கொண்டன. அதன்பின்னும் கர்நாடகம், தமிழ்நாடு தீவிரமாக எதிர்த்தபோதும், நடுவணரசு இசைவு தராத நிலையிலும், ஏமாவதி ஆற்றுக்குக் குறுக்கேயும், ஆரங்கி ஆற்றுக்குக் குறுக்கேயும் இரண்டாவது மூன்றாவது அணைகளைக் கட்டிக் கொண்டது.

தமிழ்நாடு மறுத்தும், திட்டக்குழு இசைவு பெறாமலும் கட்டப்பட்ட இவ்விரண்டு அணைகளாலும் காவிரிநீர்ச் சிக்கல் மேலும் இறுகியது. இது தொடர்பாக 1968 முதல் தமிழ்நாடும், கர்நாடகமும் பேச்சுவார்த்தை தொடங்கி இன்னும் தீர்ந்தபாடில்லை. நடுவண் அரசு இந்தச் சிக்கலைக் கண்டும் காணாததும் போலவே நமக்கென்ன என்று இருந்துவிட்டது. அதனால் சிக்கல் மேலும் மேலும் இறுகி, 1970 முதல் 25 பேச்சுகள் நடந்தும்-இன்னும் தீர்வு இல்லாமல் இருந்தது.

அதன் இறுதி முயற்சியாக 1990 சூன்-2 இல் பம்பாய் உயர்நீதிமன்ற நடுவர் சித்தோஷ் முகர்ஜி தலைமையில், காவிரிநீர் பங்கிடுவதற்கான நடுவர் மன்றத்தை உச்சநீதிமன்றத்தின் கட்டளைப்படி நடுவணரசு அமைத்தது.

அந்நடுவர் மன்றம், கர்நாடகம், தமிழ்நாடு இரண்டு மாநிலங்களிலும் பரவலான சுற்றுச்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# சீக்கியர்களுக்கென தனிநாடு என்பதில் மான் உறுதி!

சீக்கியர்களுக்கென முழு இறைமை உடைய ஒரு தனிநாடு தேவை என்பதில் அகாலி தளத் தலைவர் **சிம்ரஞ்சித் சிங் மான்** மிகவும் உறுதியாக இருக்கிறார். அவருடைய கருத்துகளுக்கு அங்குள்ள சீக்கிய இளைஞர்கள் பெரிதும் மதிப்பளித்து சீக்கிய தேசிய இன விடுதலைப் போராட்டத்தை மிகவும ஆதரித்து வரவேற்கிறார்கள்.

சென்ற ஆண்டு சனவரி மாதத்தில் அவர் முன்னைய தலைமையமைச்சர் சந்திரசேகருக்கு விடுத்த வேண்டுகோளிலும், பின்னர் மார்ச்சு மாதத்தில் சண்டிகரில் செய்தியாளர்களிடையில் பேசும்பொழுதும், சீக்கியரின் தனிநாட்டுக் கோரிக்கையை அவர் மிகத் தெளிவுபட வரையறுத்துக் கூறியுளளார். அவர் கூறியுள்ள கருத்துகள் கீழ் வருமாறு:

''எங்களுடைய கோரிக்கைகள் அனைத்தையும் எங்கள் வேண்டுகோள் மடலில் குறிப்பிட்டு அரசிடம் அளித்துள்ளோம். அதிலிருநது கீழே இறங்கி வரவோ அல்லது கூடுதலாகக் கேட்கவோ எனக்கு மக்கள் அதிகாரம் அளிக்கவில்லை.

எங்களுடைய கருத்தில் உண்மை உள்ளது. வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. அனைததுலகச் சட்டங்கள் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளன.

சிக்கியர்களுக்கென முழு இறைமை வாய்ந்த முழு தன்னாட்சி உரிமையுள்ள தனிநாடு தேவை. இது சீக்கியர்களுக்கு வாழ்வா சாவா என்ற சிக்கலாகும். முழு உரிமையுள்ள தனிநாடு என்ற கோரிக்கையை அடைய எந்த ஈகத்தையும் (தியாகத்தையும்) செய்ய அணியமாக இருப்பதாக, அகாலி தளத்தின் மூத்த தலைவர்கள் பிரகாசுசிங் பாதல், குருசரண் தோஃரா ஆகியோர் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

'பஞ்சாபை இந்திய அரசு ஒரு குடியேற்ற நாடாக (காலனியாக) ஆக்கிவிட்டது. குவைத்தை அமெரிக்கா விடுவித்தது போல, பஞ்சாபையும் விடுவிக்கவேண்டும். நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டு அமெரிக்கா சும்மா இருக்கக் கூடாது.

தேசியத் தன்னுரிமைக் கோரிக்கை பற்றி இந்திரா பேராயக்கட்சி, பாரதீய சனதா, பொதுவுடைமையர்கள் கருத்துகளைச் செய்தியாளர்கள் சுட்டிக் காட்டிய பொழுது, மான், ''இந்து மதத்தவர்கள் உணர்வு எப்படி வேலை செய்யும் என நான் நன்கு அறிவேன். அவர்களது கருத்து எனக்கு எந்த வகையான வியப்பையும் தரவில்லை' என்றார.

'எல். கே. அத்வானி, ஈ. எம். எசு., நம்பூதிரிபாகு ஆகியோர் எங்களது ஞாயமான கோரிகைகளைத் தகர்க்க முயன்றால், இதைத் தருக்க முறையில் செய்து பார்க்கட்டும்.

'முகலாயர்களும் ஆப்கானித்தான் நாட்டவரும் ஆங்கிலேயரும் எங்களது ஆற்றலை விளங்கிக் கொண்டு விட்டனர். கடந்த 43 ஆண்டுக கால வரலாற்றைப் பார்த்து இந்திய அரசும் இதை விளங்கிக் கொள்ளவேண்டும்.

'தேசியத் தன்னுரிமை என்பது இந்தியாவைப் பொறுத்தவரை ஏதமானது (ஆபத்தானது) என்றும் அரசியல் அமைப்பியல் கேட்பாடுகளுக்கே எதிரானது என்றும் அத்வானி கூறியுள்ளார்.

''ஆனால், கடந்த சனவரி மாதம் பாரதீய சனதா தலைவர்களுடன் பேசினேன். சீக்கியநாடு, அதிகாரப் பரவல் ஆகியவற்றைப் பொறுமையுடன் கேட்டனர் அவர்கள்.''

''தன்னுரிமை தொடர்பான, உலக ஒன்றிய நாடுகள் பேரவை, அமைப்பியல் சட்டத்தின் 637- ஆவது பிரிவை ஏற்பிசைவு (அங்கீகாரம்) செய்து, இந்திய அரசியல் அமைப்பியல் சட்டத்தின் 51-ஆம் பிரிவு வகுக்கப் பெற்றுள்ளது. அதனால் இந்த உரிமையை வழங்க வேண்டியது, இந்திய அரசுக்கு உள்ள கடமை ஆகும்.''

''இந்திரா பேராயம் பாரதீய சனதா, மார்க்சியப் பொதுவுடைமை ஆகியன இந்துமதப் பழைமைக் கருத்துக் கட்சிகள். இவற்றின் கட்டாயத்துக்கு அரசு ஆளாகி விடக் கூடாது. சீக்கியர்களுக்கு ஆதரவாக ஏதாவது வந்தால், இந்துமதப் பழைமைக் கருத்தாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிர்க்கின்றனர். சீக்கியர்களுக்கு எதிராக எது வந்தாலும் ஒன்று சேர்ந்து ஒப்பிசைவு தருகின்றனர். இவை போன்ற நடவடிக்கைகளால் சீக்கியர்கள் தனிமைப்படுத்தப் பட்டு விட்டனர்.''

''இந்தியா ஒன்றாக இருக்கவேண்டுமெனில் இக்கட்சிகள் மதச்சார்பற்றவையாக இருப்பது இன்றியமையாதது. இந்துக்களை நாங்கள் மதிக்கிறோம். பஞ்சாபில் உள்ள சிறுபான்மையரான இந்துக்களுக்கு (அஃதாவது பார்ப்பனர்களுக்கு) முழு உரிமைகள் தர எங்கள் கட்சி அணியமாயிருக்கிறது.

'பஞ்சாபில் கூண்டோடு எங்கள் இன மக்கள் படுகொலை செய்யப்படுவார்கள் என்னும் அச்சம்

ஏற்பட்டால் எல்லையைக் கடந்து அவர்கள் பாக்கிசுத்தானுக்குள் கூட்டமாகச் செல்லும்படி நான் அவர்களிடம் கூறியுள்ளேன். இப்படிக் கூட்டமாகச் செல்லும்பொழுது அவர்களுக்கு அண்டை நாடு அடைக்கலம் அளிக்கவேண்டும் என்று உலக ஒன்றியப் பேரவையின் அமைப்பியல் சட்டம் கூறியுள்ளது. சீக்கியர்கள் எதிர்கொண்டுள்ள தனிநாட்டுக் கோரிக்கைக்கு அனைத்துலகச் சட்டத்தின் ஆதரவு உள்ளது.''

''சீக்கியர்கள் இனிமேலும் அமைதியாக இருக்க முடியாது. தனிச் சீக்கிய நாடு கோருவதைத் தவிர சீக்கியர்களுக்கு வேறு வழியில்லை—பஞ்சாப் ஒரு குடியேற்ற நாடு ஆகிவிட்டது. குடியேற்ற நாடுகளை இந்தியா வைத்துக் கொள்ள இயலாது. உலக ஒன்றியப் பேரவையில் (ஐ. நா. -வில்) சீக்கியர்கள் ஒரு குடியேற்ற நாட்டின் குடிமக்கள் ஆக்கப்பட்டு விட்டதாக முறையீடு செய்வோம். இதற்கான தீர்மானம் அவ்வுலக ஒன்றியப் பேரவையின் முன்வைப்பு (தாக்கல்) செய்யப் பெறும்.''

''உணவினால் மட்டும் மாந்தன் வாழ்வதில்லை. அரசியல் உரிமைகளும் தேவை.''

''இந்தியப்' படையினரின் நடவடிக்கைகளை வெகுவாகக் காண்கிறோம். வடகிழக்கு மாகாணங்களிலும் படைத்துறையினர் இதே போன்று நடவடிக்கைகளை மேற்கொண்டதும் கண்டனத்துக்குரியதே! அமிர்தசரக எல்லையோரச் சிற்றூர்களைச் சேர்ந்தவர்களை இந்தியப் படைத்துறை உயர் அதிகாரிகள் மிரட்டியதாகவும் திட்டியதாகவும் அச்சிற்றூர்ப் புறத் தலைவர்கள் முறையீடு செய்துள்ளனர். இவ்வாறு செய்கின்ற படைத்துறை அதிகாரிகளின் போக்கு குறித்துக் குடியரசுத் தலைவரிடம் முறையீடு செய்யப் பெறும்.''

''பஞ்சாபில் நிலை இக்கால் அமைதியாக உள்ளது. ஆனால் எரிமலை வெடிக்கும் முன் அமைதி நிலவுவது இயல்புதான்.''

**(சன 91 முதல் மார்ச்சு முடிய உள்ள செய்திகளிலிருந்து)**

# இந்திய செய்தித்தாள்கள்!

## (மறைந்த கோயங்காவின் கருத்து)

ஒரு செய்தித்தாள் ஆசிரியரோ, உரிமையாளரோ முழு உரிமையுடன் இயங்க விரும்பும் பொழுது, அவர்களைத் தடுத்து நிறுத்த யாரால் முடியும்? உரிமையுடன் இயங்க நாம் போராட வேண்டும் என்பது தவறான கருத்து.

நீங்கள் துணிவு மிக்கவர்; நேர்மையானவர்; சொந்த உரிமையைக் காக்க உறுதி பூண்டவர் என்பதை ஆட்சியில் இருப்பவர்கள் அறிந்து கொண்ட பிறகும், உங்களைச் சீண்ட அவர்களுக்குத் துணிச்சல் வரும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படிச் சீண்டினால் ஏற்படக் கூடிய விளைவுகளை எதிர் கொள்ள அவர்கள் துணிந்து இருப்பார்கள் என்று கருதுகிறீர்களா?

இல்லை; நான் அவ்வாறு நினைக்கவில்லை.

அதிகாரத்தைக் கையில வைத்திருப்பவர்களும் அவர்களுடைய நடைமுறையில் கோழைகளாகத் தான் இருப்பார்கள். அச்சமின்றி இருப்பவர்கள் முன்னர் அவர்களால் நிமிர்ந்து நிற்க முடியாது. ஞேஞ்சான்களையும் ஊழல் பேர்வழிகளையும் தொந்தரவு செய்ய மட்டுமே அவர்களுக்குத் துணிச்சல் வரும்.

நான் மண்டியிடும் ஆளாக இருந்தால்,

ஒவ்வொரு முறை அரசு மாறும் பொழுதும், நடுவணரசில் அதிகாரச் சமன்பாடுகள் மாறும் பொழுதும், ஒவ்வோர் அதிகாரக் குழுவும் என்னை அச்சுறுத்தவும் மிரட்டவும் முற்படும். பொது மேடையில் மார் தட்டும் வெட்கமில்லாத செய்தித்தாள் ஆசிரியர்களும், செய்தித்தாள் உரிமையாளர்களும் அரசியல்காரர்கள் முன்பு கமுக்கமாகத் தங்களுக்குச் சலுகைகள் கோரி அடிமைகள் போல வணக்கம் செலுத்துகிறார்கள்.

அவர்கள் கோரிய சலுகைகள் கிடைக்காவிட்டால், மிரட்டித் தங்கள் செயல்களைச் செய்து கொள்ள முயற்சி செய்கிறார்கள். வெட்கம்!

அகவை முதிர்ந்த தள்ளாடும் செய்தியிதழ் ஆசிரியர்கள் தில்லிக்குச் சென்று தங்கள் கைகளைப் பிசைந்து கொண்டு 'ஈ! ஈ! ஈ! ஐயா, ஐயா, எனக்கு அதைக் கொடுங்கள்' நான் உங்கள் வேலைக்காரன் என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்' என்று கூறுகிறார்.

செய்தித்தாள் உரிமைகள் பற்றிய வீண் பெருமைகளையெல்லாம் மறந்து விடுங்கள். நேர்மையாகவும் அச்சமில்லாமலும் உங்கள் கடமைகளைச் செய்யுங்கள். இதைத்தான் நான் என்னுடைய எல்லாச் செய்தியிதழ்களின் ஆசிரியர்களுக்கும் கூறுகிறேன்

தொழில் ஈடுபாட்டிலிருந்து துணிவு பிறக்கிறது. அது ஒரு கோழை அல்லது முட்டாள் அணிந்து கொள்ளும் முகமூடி அன்று. நீங்கள் தலைநிமிர்ந்து நின்றால் உங்களை எதிர்கொள்ள யாருக்குத் துணிவு வரும்? உண்மையான துணிவு கொண்ட இதழ் ஆசிரியரையோ இதழ் உரிமையாளரையோ தாக்க எந்த அரசுக்கு உறுதியும் துணிச்சலும் உள்ளது?

**இராமநாத் கோயங்கா**

**நன்றி 'தினமணி' 6-10-91 சென்னை.**

# தனித் தமிழீழம், தேசியத் தன்னுரிமை ஆகியவை கட்டாயத் தேவை!

*(பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர், மருத்துவர் திரு. **இராமதாசு** கருத்துரை)*

சென்ற நவம்பர் தொடக்கத்தில், பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் திரு. இராமதாசு அவர்கள் **'சாணக்கியன்'** கிழமை ஏட்டுக்கு ஒரு நேருரை கொடுத்துள்ளார். அதில் அவர் கூறிய கருத்துகள் அன்பர்கள் மனதில் வைக்க வேண்டியவை. அவை வருமாறு:

''ஈழ மண்ணில் நடக்கும் இலங்கைப் படையினரின் கொடுமைகளுக்கு நாங்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்து வருகிறோம். செய்தித்தாள்கள் மேல சாதியினரின் கைப்பிடிக்குள் இருப்பதால் அவை வெளிவருவதில்லை. தமிழ் உணர்வை மங்கச் செய்ய நினைக்கும் சில ஆற்றல்களதாம், புலிகள் தமிழகத்தில் சட்டம், ஒழுங்கைச் சீர்குலைத்ததாக கருத்துப் பரப்பல் செய்கின்றன. அதற்கு எடுத்துக்காட்டாக ஓர் ஊரையோ, நகரத்தையோ சுட்டிக்காட்ட முடியுமா?''

''புலிகள் தங்களிடம் உள்ள புதுமையான **தளவாடங்களை வைத்துத் தமிழகக் காவல் துறையை இரண்டே மணி நேரத்தில் செயலிழக்கச் செய்ய முடியும். அவர்கள் இந்தியப் படையையே அப்படிச் செய்தவர்கள். ஆனால் நடந்தது என்ன? அறுபதுக்கும் மேற்பட்ட புலிகள் நஞ்சு உண்டு தங்களைத்தாம் அழித்துக் கொண்டார்களே தவிர, தமிழகப் பொதுமக்களை நோக்கித் தங்கள் துமுக்கி (துப்பாக்கிகளைத்) திருப்பவில்லை.**''

''அருவருப்பான, இழிவான தமிழக அரசியல்காரர்களின் வெற்றுக் கூச்சல் ஆதரவை நம்பி ஈழத் தமிழ் மக்கள் இல்லை. அவர்கள் பிரபாகரனையும் தங்கள் பொடியன்களையுந்தாம் நம்பியிருக்கிறார்கள். தமிழக அரசியல்காரர்களின் போலித்தனமான—ஆதாயம் பார்க்கும் ஆதரவு இருப்பதும் ஒன்றுதான்; இல்லாததும் ஒன்றுதான்!

தனி ஈழம் என்பதைத் தவிர்த்த வேறு எந்தத் தீர்வும் பயன் இராது. இந்திரா, இராசீவ் எடுத்த முயற்சிகள் தோற்றுப் போனதும் இதனால்தான். ஒரு 'சென்ட்' அளவு நிலத்தைக்கூட கொண்டிராத பாலத்தீனத்தின் விடுதலை இயக்கத்தை (பி.எல்.ஓ.வை) இந்திய அரசு ஆதரிக்கிறது. யாசர் அராபத்தைக் குடியரசுத் தலைவரே போய் வரவேற்கிறார். தென் ஆப்பிரிக்காவில் கனவு நிலையில் உள்ள போராட்டத்தை ஆதரித்து மண்டேலாவை வரவேற்கிறோம். இதுபோலும் ஒரு முடிவைத் தமிழீழ நிலையிலும் எடுத்து இசைந்தேற்க (அங்கீகரிக்க) வேண்டும். உலக ஒன்றியப் பேரவையையும் அதை ஏற்கும்படி செய்விக்க வேண்டும்.''

''அரசியல் சட்ட அமைப்பு மாற்றப்படாத வரை இதற்குவிடிவு கிடையாது. தமிழன் எதற்குமே தில்லிப் பக்கம் போகக்கூடாது. தனக்குத் தேவையான தன்னிறைவை மாநிலத்திலேயே கூடுமானவரை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இது என் சொந்தக் கருத்து. எதிர்காலத்தில் இம்மாதிரிச் சிக்கல்கள் இன்னும் அதிகரிக்கும். அடிமைகளாகவும், இரவலர்கள் (பிச்சைக்காரர்கள்) ஆகவும் மாநிலங்கள் நடத்தப்படலாம். ஒன்று, அதற்கு நாம தயங்கக்கூடாது. இல்லாவிடில் தொலைநோக்கோடு நம்மை நாமே அணியப்படுத்திகொள்ளவேண்டும். ஆட்சியாளர்கள்தாம் அதற்கான திட்டங்களை வகுக்கவேண்டும்.

''இந்தியாவில் உள்ள தேசிய இனங்களிடம் விடுதலை வேட்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தன்னாட்சி உறுதி (சுய நிர்ணய) எண்ணங்கள் மேலோங்குகிறது. உருசியாவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இதற்குத் தூண்டுகோல் பிஜூ பட்நாய்க் போன்ற பழம பெரும் தேசியக்கொள்கையினர் கூட இதை ஆதரிக்கின்றனர். ஒரிசா பிரிந்து போய்விடும் என்று அவரே அறிவித்திருக்கிறார்.

''ஆனால் நாட்டிலுள்ள வல்லாளுமை ஆற்றல்களும் அவர்களின் நம்பிக்கை ஆர்வலர்களும் பாரதீய சனதா போன்ற இயக்கங்களும் தேசிய இனங்கள் விடுதலை பெறுவதையோ உரிமை அடைவதையோ விரும்பவில்லை. பிரிவினை ஆற்றல்கள் அது, இது என்று தடுக்கப் பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட தடைகள் அழுத்தப்பட்டுக் கிடப்பவர்களின் எழுச்சியை வேகப்படுத்துமே தவிர குறைக்காது. இரும்புத்திரை நாடான உருசியாவிலேயே அதுதான் நடந்துள்ளது.''

''படைத்துறை, நாணயம், வெளிநாட்டுறவு, அஞ்சல், தொலைவரி தவிர ஏனைய அதிகாரங்களை நடுவணரசு மாநிலங்களின் பொறுப்பில் விட முயற்சிகளைத் தொடங்கவேண்டும். நாடு துண்டாடுவதை இதன் மூலம் தடுக்கலாம்.''

(இக்கொள்கை திரு. இராமதாசுடையதும், அவர் கட்சியினுடையதாகவும் இருக்கலாம். எல்லா நிலையிலும் முழு இறைமையுடைய தனி நாட்டுக் கொள்கையே **'தென்மொழி'** இயக்கத்தின் கொள்கையாகும் என்பதை அன்பர்கள் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும் )

(தொடர்ச்சி *11*-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(இதழ் எண் 150-இன் தொடர்ச்சி)

# சார(சத்து)உணவு அமைப்பாளர்களின் அவலநிலைகள்!

—அதியமான்—

ஒன்றிய அலுவலர் அவர்கள் நினைத்த நேரத்தில்தான் வந்து கூட்டத்தை நடத்துவார்கள். ஆனால் அமைப்பாளர்கள் காலையிலேயே போய் மாலைவரை பட்டினியாக இருந்து காத்துக் கிடக்க வேண்டும். அலுவலர் உண்டு, உறங்கி எழுந்து வந்து, கொட்டாவி விட்டு விட்டுப் போய் விடுவார். அமைப்பாளர் பட்டினியோடு கணக்குகளை முடித்துக் கொடுத்துவிட்டு வரவேண்டும்!

ஒவ்வொரு நடுவாண்மைக்கும் திங்களுக்கொருநாள் அரிசி, பருப்பு, நெய் முதலான பொருள்களைச் சரக்குந்துகளில் கொண்டுவருவார்கள். அவர்கள் இருட்டிய பிறகும் வருவதுண்டு. அதுவரைக்கும் காத்திருந்தே வாங்க வேண்டும்.

கலைஞர் முதல்வராக வந்தவுடன் முட்டை வழங்கப்பட்டது. இப்போது முட்டைகளையும் அரசே ஒன்றிய அலுவலக மூலம் வழங்குகிறது. இதனைப் பெறவும், ஒரு நாள் முழுவதும் பள்ளியில் காத்துக் கிடக்கவேண்டும். இது திங்களுக்கு இருமுறை நிகழும். ஒரு முட்டையை வேக வைக்க விறகிற்காக 5 காசுகள் வழங்கப்படுகிறது. இந்தப் பொருளகள் முட்டை உளபடச் சிதைவு (சேதம்) ஏற்படுமானல் அந்த இழப்பையும் அமைப்பாளர்களே ஏற்க வேண்டும்.

கலைஞர் ஆட்சியில் அரசு ஊழியர்களுக்குச் சம்பளத் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. நடுவணரசு ஊழியர்களுக்கு ஒப்பாக இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. ஆனல் இந்த சார உணவு அமைப்பாளர்கள் கைவிடப் பட்டனர். காணியம் ம. கோ. இரா. அவர்களால் அமர்த்தப்பட்ட அமைப்பாளர்கள். எனவே கைவிடப்படுகிறது என்பதான பேச்சு அடிப்பட்டது. அதையும் நம்ப வேண்டியுள்ளது. ஏனென்றல் இவர்களுக்கும் சம்பளத்தைத் திருத்தி அமைக்கவில்லை.

இக்கொடுமையைச் சார உணவுத்திட்டத்தைப் புகழும் செய்தி இதழ்கள் (பத்திரிகைகள்) எடுத்துக் கூறுவதில்லை. தந்தை பெரியார் 4-8-1957-இல் 'விடுதலை'யில் எழுதிய செய்தியை இங்கு நினைவு கூர்வோம்.

''சிப்பந்திகள் எந்த வேலையில் இருந்தாலும் யாவருக்கும் ஒன்று போன்ற தரத்தை திடப்படுத்தவேண்டும். குறைந்தது. 50 ரூபாய்க்குக் குறைவில்லாத சம்பளம். கூட்டுகிறவர் உட்பட குமஸ்தா வரை ஏற்படுத்தி ஒரே மாதிரி பஞ்சப்படி கொடுக்கவேண்டும்'' (குறிப்பு : உருபாய் 50 என்பது அப்போதைய மதிப்பு) மேலும் விடுதலை 9-8-1675 இல் தந்தை பெரியார் கூறுகிறர்.

''சம்பளத்திட்டத்தில் மனிதனின் தேவையை நிர்ணயிக்கும் போது சனங்களின் நிலைமை அதாவது 100க்கு 75 பேர் இருக்கும் நிலைமை அனுபவிக்கும் சவுகரிய நிலைமை ஆகியவைகளைப் பார்த்தேதான் நிர்வாகஸ்தர்களை நிர்ணயித்து சம்பளத்திட்டம் போடப்படவேண்டுமே தவிர கனவு காண்கின்ற நிலைமையை உத்தேசித்து இந்திய மக்களில் 100க்கு ஒருவன் கூட அனுபவிக்கச் சாத்தியமில்லாத நிலைமைப்படி சம்பளம் போடுவது என்பது யோக்கியமான நாகரீகமாகாது.' என்று கூறினர். இந்தச் சார உணவு அமைப்பாளருக்குக் கனவு காண்கிற நிலைமையிலே சம்பளத்திட்டம் போடப்பட்டதாகக் கருத வேண்டியுள்ளது.

வேலையில் அமர்த்தப்படுகிறவர்களுக்குச் சம்பளத்திட்டம் செய்யுங்கால் திட்டம் போடுகிறவர்கள், தங்களுக்குக் குடும்பம் இருப்பது போன்றே வேலை செய்கிறவர்களுக்கும் உண்டு என்ற எண்ணம் இருத்தல் வேண்டும். திங்கள்தோறும் உருபா 220-ஐவைத்துக்கொண்டு மனைவி மக்களோடு வாழ முடியுமா? எண்ணிப் பார்க்கவேண்டாமா? அரசு ஊழியர்களுக்கு விலை ஏற்றத்திற்கேற்ப(D.A) விலை உயர்வுப்படி வழங்கப்படுகிறது. இந்தப்படியும் இவர்களுக்கு இல்லை. இவர்களுக்கு மட்டும் விலை ஏருதா என்ன?

விழாக்காலங்களில் (பொங்கல், தீபாவளி, கிறித்துமசு, ரம்சான்) அரசு ஊழியர்களுக்கு வழங்கும் முன்பணம் இவர்களுக்குக் கிடையாது. முழு நேரப் பணியாளர்களாக இவர்கள் இல்லை எனக்குறை கூறி, அரசு ஊழியர்களுக்கு வழங்கும் வாய்ப்புகளை அளிக்காமல் இருக்கிறது.

மக்கள் மீது அன்பு கொண்ட அரசாக உண்மையிலிருந்தால், இவர்களை நிலையானவர்கள் (Permanent) ஆக்கி முழு நேர ஊழியர்களென்று ஏற்றுக் கொள்ளவேண்டும். இவர்களுக்குத் தலைமை ஆசிரியர்களுக்கு உதவியாக இருக்கவும் வெள்ளி வேலைப் பொறுப்புகளைக் கொடுக்கவும் வாய்ப்புகள் உள்ளன. ஒரு பள்ளியில் தலைமை ஆசிரியர் செய்யும் ஆவணப் பணிகளையும், குடிக்கணக்கெடுக்கும் பணிகளையும் அலுவலகங்களுக்குச் சென்று இலவயப் பொருள்களைப் பெற்று வரவும் பணிக்கலாம். படிப்பிக்கும் வேலையைத் தவிர இதர வேலைகளைத் தலைமை ஆசிரியர்களுக்குக் கொடுக்காமல், இந்த அமைப்பாளர்களிடம ஒப்படைத்து, இவர்களை முழுநேர ஊழியர்களாக ஆக்க அரசு விரைவில் முனவர வேண்டும். இது மிக இன்றியமையாததாகவும் இருக்

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

# பறம்பை அறிவன் பக்கம்!

### 1. மதுரைப் பல்கலையில் சாதியம்!

பேரா. வையாபுரிப்பிள்ளை 'வாழ்வும் பணியும், பற்றி எழுதும்போது, பேரா மு. சண்முகம்பிள்ளை, பேரா. சுந்தரம்பிள்ளை பற்றிக் கூறுகின்றார். 'பிள்ளை'கள் பற்று வரலாறு எழுதக் காரணமாக இருக்கலாம். மதுரைப்பல்கலைக் கழகம் முனைவர் உயராய்வுகளை மேற்கொள்வதற்கு எடுத்துக் கொண்ட 'மரபு' சாதியமாக அமைந்திருப்பதாகக் கூறுவர். 'நாடார்' சாதி ஆய்வுக்கு ஒரு 'நாடார்' தாம் தகுதியுடையவர். கோனார்சாதியை ஒரு கோனாரே ஆராய்வதுதான் பொருந்தும்...என்று ஒவ்வொரு 'சாதியியல்' 'ஆய்வும் அவ்வச் சாதியாரைக் கொண்டே நடத்துவது என்ற 'வழக்கம்' இப் பல்கலைக் கழகத்தில் உருவாக்கப்பட்டிருப்பதாக அறிந்து வருந்தினேன்.

'வேறு சாதி'க்காரர் ஆராய்வதில், மரபு சடங்கு, பழக்க வழக்கங்களை அறிவதின் இக்கட்டு உண்டாகும் என்று மேற்கண்ட 'நடைமுறை'க்குக் காரணம் கூறுகின்றனர்.

### 2. பொது மக்கள் போராட்டங்கள்!

'ஏட்டைக் கொளுத்தினால் எண்ணங்கள் எரிந்து விடுமா?'' என்று 'தினமணி' கேட்கிறது! 'பார்ப்பனிய, உயர்சாதித் திமிர்' மாறுவது கடினமே. அதனை அடக்க' வலிமையற்ற 'மக்கள்' தங்களின் எச்சரிக்கையை ஏடுகளை எரிப்பதன் மூலம் காட்டுகின்றனர். வலிமையான கருத்துப் பரப்பல் அரசிடமும் பணக்காரரிடமும் உள்ளது. எளிய மக்கள் எங்கே போவார்கள? இவர்கள் தங்கள் கருத்துகளை, அறிக்கை, ஊர்வலம், உண்ணா நோன்பு, பட்டினி ஊர்வலம் என்கிற பாதையில் விளக்கி வந்து பெற்ற வெற்றி என்ன? 'வன்முறை'யைச் செலுத்தும் கருவிகள் இம்மக்களிடம் இல்லையே! 'தங்களைப் பலி' கொடுத்துத் தான் மக்கள் தங்கள் எண்ணங்களை'ப் புலப்படுத்தி வருகின்றார்கள்!

### 3. ஊழல் தேர்தல்!

''அடிமைக்கோ அறிவென்ப தெதிரிக்கு ஆக்கம்'' எத்துணை உண்மை? இன்று தமிழகத்தின் மட்டுமன்று. தில்லியில் நாடாளுமன்றத்தில் 'நரசிம்மராவ். 'நம்பிக்கை ஒப்போலை' பெறக் காரணமாக இருந்தவர்கள் அறிவடிமைகளே. மக்களிடம் பெற்ற ஒப்போலை— இந்த அரசின் நடவடிக்கைகளை 'அப்படியே' ஏற்பதென்றாகி விட்டது. கொள்கை எதிர்ப்பில்லை. பதவி நீடிப்பே எதிர்க்கட்சியிலிருந்து ஆளுங்கட்சி வரை உள்ள நிலையாகும்.

''தேர்தலில் வென்ற அத்தனை நாடாளுமன்ற உறுப்பினரும், ஓரிலக்கம் உருபாகளுக்குள்ளேயே செலவிட்டதாகத் தேர்தல் ஆணைக்குழுவிடம் கணக்களிக்கப் போகின்றனர். நடைமுறையில் எத்தனை இலக்கம் எவ்வளவு கோடி? சட்டமன்ற உறுப்பினரே இலக்கம் தாண்டாமல் முடியாது. கட்சித் தலைமைகளிடம் வேட்பாளர் சீட்டுப் பிடிக்கவே பல இலக்கம் செலவிட்டு வருகின்றனர். ''இவர்களின் கள்ளக் கணக்கு இப்படி-ஆட்சி எப்படி இருக்கும்?'' என்று தேர்தல் பற்றிப் பொரிந்து தள்ளினார் தோற்றுப்போன ஒரு கட்சிக்காரர்.

### 4. பார்ப்பனியம், பார்ப்பனர், தமிழர் பற்றி...

'பார்ப்பனீயம் என்பது பார்ப்பனர்கள் அறிந்தோ, அறியாமலோ. நேர்மையாகவோ சூழ்ச்சியாகவோ கடைப் பிடித்து வரும் ஓர் இனக் கொள்கை.

'அக்கொள்கை காலத்திற்கும், அறிவுக்கும், அறிவியலுக்கும், வாழ்வியலுக்கும். மாந்த நேயத்திற்கும், வேறு எதற்குமே பொருந்தாத காட்டு விலங்காண்டிக் கொள்கை, கண் மூடித் தனமான, மூடத்தனமான மக்களை இழிவு படுத்துகின்ற கொள்கை.!

'அந்த உண்மையை வேண்டுமென்றே பார்ப்பனர்கள் உணர மறுக்கினறனர்; அல்லது உணர்ந்தாலும் ஒப்ப மறுக்கின்றனர்; அல்லது நம்பினாலும் தங்கள் பழங் கொள்கையின் ஆழமான சில மரபுகளைக் கைவிட மறுக்கின்றனர்.

''ஆனால் அதே அடிப்படையில் அவர்களில் திரிந்து வருகின்ற மனம் மாறி வருகின்ற சிலரை நாம், அருவருத்து ஒதுக்கியே வைக்கின்ற நிலை அறிவாகாது; அறிவியல் சிந்தனைக்கும், மெய்யறிவியலுக்கும் பொருந்தாது.''

'எனவே நாமும் நம் முரட்டுத் தனத்தை மாற்றிக் கொள்ளவே வேண்டும், மாறிவர விரும்புமின்றவர்களை வரவேற்பதே நம் பண்புடைமை!'

''ஓர் இனத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக ஓர் ஆளையோ, ஆள்களையோ விரும்பாத அல்லது-வெறுக்கிற அல்லது பழக மறுக்கின்ற தன்மை, பச்சைக் காட்டு விலங்காண்டித் தன்மையே! பிறகு நாம் எப்படித் தாழ்த்தப் பட்ட மக்களைச் சமமாகக் கருத முடியும்? 'இனி நம் தமிழின மக்களில் மனநிலையாலும், பண்பு

நிலையாலும். நடைமுறை நிலையாலும் இனக் கேட்டு நிலையாலும் எத்தனை வெறுக்கத்தக்கவர்கள் உளர்?

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்—**

(தென்மொழி நவ 81-சன82)

### 5. தேசியம்...!

சி. அறிவுறுவோன், 'துப்பாக்கியால் தேசியத்தை உருவாக்க முடியுமா?'' என்ற வினவெழுப்பிய கட்டுரை (பாலம் -அக். 1990) கண்டேன். 'துப்பாக்கியால் தேசியத்தை ஒடுக்க முடியுமா?' என்ற வினவும் உள்ளேயிருந்து வெடித்தெழுகிறது. 'தேசியம்'. ''இந்தி(ய) 'திராவிட' தமிழ் ..'' என்ற சொற்களின் இணைவாக்கியதும் எழும் 'சிக்கல்கள் பற்றி எல்லாம் அவர் விரிவாகப் பேசவில்லை. அவர் கட்டுரையின் இறுதியில் கூறிய கருத்து...

''...நடுவண் அரசிடம் குவிந்திருக்கும் பேரளவான அதிகாரங்களை மாநில அரசுக்கு மாற்றவும், அப்படி மாற்றியதை மீண்டும் மாநில அரசிடமிருந்து பறித்துக் கொள்ளாமல் இருக்கவும தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்குமான போராட்டத்திற்கு மக்கள் நாயக வகையில் நாடுதழுவிய முறையில் மக்களைக் கிளப்பி விடுவதே ஆளும் வகுப்பிற்கு நெருக்கடியையும், மக்கள் நாயக வளர்ச்சியின் ஒருபடி முன்னேற்றத்தையும் கொண்டு வர முடியும்''

கடந்த காலத்தில், மாநில அதிகாரமாக இருந்தவை மீண்டும் நடுவணரசில்' சேர்க்கப்பட்டு வருவதைத் தோழர் சி. அறிவுறுவோன் எண்ணிப் பார்த்தல் வேண்டும்! 'மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியுரிமை நடுவணரசில் சேர்க்கப்பட்டிருப்பதை இங்கே எடுத்துக் காட்ட விழைகிறேன்.

''தமிழன் என்பது எந்த ஒரு சாதியையும் விட வலிமை குன்றியதாகவே இருக்கிறது. தமிழன் நிலையே இதுவென்றால் 'இந்தியன்'' நிலையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். என்கிற அறிவுறுவோன், தமிழகம் குறித்த அரசியல் அதிகாரம் பற்றியும் அதற்கான அமைப்பு குறித்தும். போராட்ட முறை, எதிரிகள், நண்பர்கள் குறித்தும், பேசுதல்வேண்டும் இக்கருத்தில், தமிழனை விட 'இந்தியன் வலிமையற்றவன் என்ற அழுத்தம் தெரிகிறது. அவனை 'வலிமை' யுள்ளவனாகக் காட்டும் 'ஏற்பாடுகள்' பற்றியும் அறிவுறுவோன் என்ன கருதுகிறார்?

### 6. திரைப்படமும் பெண்களும்!

பெண்கள் திரைப்பட அரங்குகளை நிரப்புகிறார்கள். முன்பெல்லாம் இரவு நேரக் காட்சிகளில் இரண்டாவது ஆட்டத்தில் பெண்களில் அதிகம் இருப்பதில்லை அப்படிப் போகிறவர்களை இழிவானவர்கள் என்று கருதினார்கள். இப்போது பெண்கள் வீட்டு வேலையோடு நின்று விடாமல் வெளிவேலை, ஊழியம், பதவிகளிலும் ஈடுபட்டுள்ளார்கள். எனவே, மாலை நேரக் காட்சிக்குப் போக இயல்வதில்லை. வீட்டு வேலைகள் அரைகுறையாக விடப்பட்டுப் போகின்றன. அவற்றை பெரும்பாலும் பெண்களே முடித்துத்தீர வேண்டிய கட்டாயத்திற்கு ஆளப்பட்டு வருகின்றார்கள். அவறை முடித்து, ஒய்வாக இருக்கவேண்டிய இரவு நேரத்தில் தங்களின் அலுப்புச் சலிப்பை மாற்றிக் கொள்ள இரண்டாவது திரையரங்கக் காட்சிக்குப் போகிறார்கள்.

பெண்கள் தனியாக இரவு நேரக் காட்சிக்குப் போனால் அடித்து மிரட்டி ''உங்கள் வீட்டில் ஆண்பிள்ளைகள் இல்லையா?'' என்று கேட்ட மாவட்ட ஆட்சியாளராக இருந்த ஒரு பெண் அதிகாரியைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன்.

### தமிழினம் தலைநிமிர!

ஆர்வலரே! அன்பரே! ''தமிழினம் தலை நிமிர வேண்டும்; உலக மக்களினத்துடன் ஒன்றிணைந்து உயர வேண்டும்'' இன்று தமிழினம், உட்பூசல்களால், சாதிகளால், அறியாமையால், உரிமை மறுப்பினால் அல்லல் பல அடைந்து வருகிறது.

சுறவம், தமிழாண்டின் தொடக்கம், இந்நாளில் அல்லல்கள் தீர ஆற்றல்மிக்க நம் கொள்கை ஏழினை ஏந்திப் புதுச்சுடர் பரவத் தொண்டியற்ற உறுதி பூண்போம்.

நம் உ. த. மு. க. முதல்வர் **பாவலரேறு** அவர்களின் தொலைநோக்குடைய கொள்கைகளைப் புரிந்து, அறிந்து தெளிந்து முன்னேறுவோம்.

---

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. மக்களுடைய வாழ்க்கை வகைகளை உயர்த்த அரசு முன்வரவேண்டும் என்பதான நோக்கம் இவர்களுடைய வாழ்வியலில் நிறைவேற்றப்படவேண்டும்.

(குறிப்பு: இவை தவிர இவ்வமைப்பாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிற துன்ப நிலைகளைப் பற்றிப் புள்ளி விளத்தங்களோடு **'தமிழ் நிலம்'** சென்னை-5 என்னும் முகவரிக்கு எழுதலாம, அவையும் பொது மக்கள் பார்வைக்குக் கொண்டுவரப் படும்)

Scanned with CamScanner

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

## செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்.

(துணைப் பொதுச்செயலர் பறம்பை அறிவன் அவர்களின் கருத்துகள், மடல்கள், அறிக்கைகள் முதலியன இப் பகுதியில் தொடர்ந்து வெளிவரும். தேவையான. விடத்து முதல்வர் அறிக்கைகளும், மடல்களும அவ்வப்பொழுது இடம் பெறலாம்.)

ஆர்வலர்களே, அன்பர்களே,

01 உ, த. மு. க வின் 'துணைப் பொதுச் செயலாளரின் வரைவு அறிக்கை'யின் மீதான உங்களின் கருத்துரைகளைப் பெற இன்றும் காத்துள்ளேன்!

02 ஆயினும், அமைப்பு வேலையில் பங்கேற்ற சிலரின் ஈடுபாடு, 'வரைவறிக்கை'மீது வினு வெழுப்பாமல் தொடர்ந்து வந்ததை அறிவேன். இதனால் என் மனம் நிறைவு பெறவில்லை. எனக்குள்ளேயே 'ஏன் இந்த அமைதி?' என்ற வினு எழுந்தபடி இருந்தது.

03 ஓ! அமைதி. உடன்பாட்டின் அறிகுறி தானே! இன்று, பாவலரேறு தளைப்பட்ட பிறகும் உங்களிடம் அமைதி, இதுவும உடன்பாட்டின் அடையாளம் தானே? இல்லை, இயலாமையின் வெளிப்பாடோ?

04 எனக்குள் சிந்தனை...அதன் காரணமாகவே இத் 'தெளிவுரை'யை உங்கள் முன வைக்கிறேன்.

05 உ. த. மு. க வின் கொள்கைகளைத் தந்தவர் பாவலறேு பெருஞ்சித்திரனர். எனவே, அவரை நாம் 'கழக முதல்வர்' எனப் போற்றுகிறோம்.

06 'கழக முதல்வர்' அமைப்பின் தாயனையவர். ஆயினும் 'கொள்கைகளை' வழங்கிய அவர்க்கு நம் நன்றியறிதலையும், வணக்கத்தையும் தெரிவித்தல் காரணமாக, அவருடைய 'நடைமுறை' யாவும் உ, த. மு. க. என்ற அமைப்பின் 'முடிவும்' 'செயல் உடன்பாடும்' ஆகா என்பதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம்!

07 உ. த. மு. க. வின் உயர்ந்த கொள்கைகளைச் செயல்படுத்துவதில் பாவலரேறு அவர்கள் குறுக்கிட்டது மில்லை; தடைப்படுத்தியது மில்லை.

08, என்றபோதும், 'திசை தவறிய' அன்பர்களையும் ஆர்வலர்களையும், அவர்கள் தெளிவூட்டியிருக்கிறார்கள். இதற்குக் கடந்த காலத்தில் 'வரலாற்றுச் சான்றாக விளங்கியுள்ளார் பாவலரேறு' என்பதை அறிவீர்கள்.

09 பாவலரேறு அவர்களின் 'தொலைநோக்கான தென்மொழிக் கொள்கையை உ. த. மு. க. ஆய்வுக்குரியதாகக் கருதிக் கவனித்து வருகின்றது.

010 இதனால், உ. த. மு. க. அன்பர், ஆர்வலர் ஆகிய உங்களுக்குக் 'குழப்பம்' இருக்குமெனில், அதற்குத் தலைமையே காரணமாதல் கூடும்.

011 அதே வேளை, தலைமை, கொள்கை விலகலில் ஈடுபடுமானல், சுட்டிக்காட்ட வேண்டிய உங்கள் பொறுப்பினை நினைவூட்டும் கடமை, எனக்குள்ள தென்று உணர்கின்றேன். சரி தானே?

012 உலகம் அளாவிய, தமிழினத்தின் முன்னேற்றம் குறித்த மாந்தநேயக் கொள்கைகளைப் பெற்றிருக்கிற நாம் அறிய வேண்டியனவும் பெற வேண்டியனவுமான திறன்கள் ஏராளம்.

013 'உலகம்' என்ற உயர் கொள்கையால் தமிழினம் இழந்தவை அதிகமே.

014 ஆனல், இழந்தும் பெறற்கரிய பேறு, 'யாதும்ஊரே யாவரும் கேளிர்' என்ற மாந்த நேயக் கோட்பாடு.

015 இதனை, உரிமை வாழ்வில் எய்த முடியுமே அன்றி, அடிமைத்தளத்தில் அடையவியலாது.

016 இதனை அறிவோம் நாம். உரிமை விடுதலை குறித்த நம் செவ்வியல் பார்வை உலகம் தழுவிய தென்பதை நாம் உறுதி செய்யப் பெரும் ஈகத்திற்கு அணியமாதல் வேண்டும்.

017 அதற்கு முன்னதாக உழைப்பின் வடிவங்களாக நாம் மாறுதல் வேண்டும்.

018 பாவலரேறு அவர்களோ, உ.த.மு. கவின் இன்றுள்ள நிலைபாட்டில் உ. த. மு. க.வை

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# வேண்டாம் இந்த இடஒதுக்கீடு!

## (ஒரு பூணூலின் புலம்பல்)

— குணத்தொகையன் —

இன்னும் என்ன? இட ஓதுக்கீடு
வேண்டாம் இந்த இட ஓதுக்கீடு!

உங்களைத் தானே!
அட!
உங்களைத் தான் நான் கேட்கிறேன்!
நீங்கள் தமிழரா? தெலுங்கரா? கன்னடரா?
தனித் தனித் தேசிய இனங்களா?
இல்லை... இல்லை. இல்லவே இல்லை.
நீங்கள் சூத்திரர்கள்; பஞ்சமர்கள்! பாவிகள்!
பாதகர்கள்!
சண்டாளர் ள், அரக்கர்கள், அசுரர்கள்!
ராட்சசர்கள், மிலேச்சர்கள், தீயர்கள்!
புலையர்கள், அரிசனங்கள், தஷ்யூக்கள்,
எத்தனை இழி பெயர்கள் உங்களுக்கு
இட்டோம்!
இவை அத்தனையும் விட்டுப் போட்டு,
அது என்ன, தாழ்த்தப்பட்ட-பிற்படுத்தப்பட்ட
தமிழரென்று மாநாடு?
இட ஒதுக்கீட்டிற்கா?

இன்னும் என்ன...? இடஒதுக்கீடு?
வேண்டாம் இந்த இட ஒதுக்கீடு!

மாடு மேய்க்கிறாய்; மூட்டை சுமக்கிறாய்;
வண்டி இழுக்கிறாய்; தெரு கூட்டுகிறாய்;
குப்பை வாருகிறாய்; மலம் அள்ளுகிறாய்;
கழிவறை கழுவுகிறாய்; சாய்க்கடையில்
பீத் தண்ணீரில், கோவணத்துடன் இறங்கி,
அடைப்பை எடுக்கிறாய்;
அப்போது, நச்சுவளி தாக்கி, மூச்சுத் திணறி,
முழுதாய் சாகிறாய்;
கொஞ்சம் கொஞ்சமாய்ச் சாகிறாய்!
இவை அத்தனை வேலையும் உனக்குத்தான்
ஒட்டுமொத்தமாக ஒதுக்கிவிட்டோமே!

இன்னும் என்ன இட ஒதுக்கீடு!
வேண்டாம் இந்த இட ஒதுக்கீடு!

சேற்றில் இறங்குகிறாய்; ஏர் உழுகிறாய்;
நாற்று நடுகிறாய்; நீர் பாய்ச்சுகிறாய்;
களை எடுக்கிறாய்; உரம் இடுகிறாய்;
அறுவடை செய்கிறாய்;
நெல்லை அவித்து அரிசிஆக்குகிறாய்;
தவசங்கள், பருப்பு, காய்கறி, பழம், பால்
தயிர், வெண்ணெய், எண்ணெய், முந்திரி,
ஏலம். பருத்தி என— ஏராளமாய் விளைவிக்
கிறாய்?
பஞ்சை எடுக்கிறாய்; நூல் நூற்கிறாய்;
சாயம் ஏற்றுகிறாய்; ஆடை நெய்கிறாய்;
உடை தைக்கிறாய்; பருத்தி மட்டுமா?
பட்டும், நாரிழையும் (பாலியெஸ்டரும்) கூட!
இவை— அத்தனை வேலையும் உனக்குத்தான்
ஒட்டுமொத்தமாக ஒதுக்கிவிட்டோமே!

இன்னும் என்ன இட ஒதுக்கீடு?
வேண்டாம் இந்த இட ஒதுக்கீடு!

மண்ணைக் கூட்டுகிறாய்; செங்கல் அறுக்கிறாய்;
தீயில் சுடுகிறாய்; நீயும் வேகிறாய்;
பைஞ்சுதை (சிமெண்டைக்) கலந்து
வீடு கட்டுகிறாய்;
பலகையில் ஏறி பல மாடிகள் கட்டுகிறாய்;
மூசை (மொசைக்) போடுகிறாய்;
கண்ணை, மூக்கை, கையை, காலை எரிக்கும்
சுண்ணும்பையும் அடிக்கிறாய்;
உயிருக்கு அஞ்சாமல் உயரத்திலே தொங்கி,
பலவண்ணம் பூசுகிறாய்;
எங்கள் மாளிகைக்கு எழில் சேர்க்கிறாய்;
இவை—
அத்தனை வேலையும் உனக்குத்தான்
ஒட்டுமொத்தமாக ஒதுக்கிவிட்டோமே!

இன்னும் என்ன இட ஒதுக்கீடு?
வேண்டாம் இந்த இட ஒதுக்கீடு!

பாறையைப் பிளக்கிறாய்; வெடி வைத்துத்
தகர்க்கிறாய்;
கல் உடைக்கிறாய்; சாலையில் அடுக்குகிறாய்;
கொதிக்கும் 'தாரை' ஏந்திக் கொளுத்தும்
வெயிலில் காலில் செருப்புமின்றிச் சாலை
போடுகிறாய்;
சுரங்கம் வெட்டுகிறாய்: மாழை (உலோகம்)
உருக்குகிறாய்;
நீயும் உருகுகிறாய்;
இவை—
அத்தனை வேலையும் உனக்குத்தான்
ஒட்டுமொத்தமாக ஒதுக்கிவிட்டோமே!

இன்னும் என்ன இட ஒதுக்கீடு?
வேண்டாம் இந்த இட ஒதுக்கீடு!

தீக்குச்சி செய்கிறாய்; பட்டாசு செய்கிறாய்;
பார்க்கும் பொருளனைத்தும் பாட்டாளி நீ
செய்கிறாய்?
இழுவை (ரிக்ஷா) முதல் பேருந்து; சரக்குந்து
(லாரி) வரை செய்கிறாய்; ஓட்டுகிறாய்;
தேயிலை பறிக்கிறாய்; தேரும் இழுக்கிறாய்;
கோயிலைக் கட்டுகிறாய்; சுடுகாடும் காக்கிறாய்!
முடி வெட்டுகிறாய்; துணி வெளுக்கிறாய்;
சலவை செய்கிறாய்;
இந்த வேலைகளில் ஏதாவது ஒன்றுக்கு

நாங்கள் போட்டிக்கு வந்தோமோ?
நாங்கள் என்ன குடியரசுத் தலைவராக,
துணைக் குடியரசுத்தலைவராக,
அமைச்சர்களாக, முப்படைத் தலைவர்களாக,
நடுவர்களாக, உயர் அதிகாரிகளாக,
ஐ.ஏ.எசு.; ஐ.பி.எசு.; ஐ.எப்.எசு, ஆக
வெளிநாட்டுத் தூதர்களாக, பொதுத்துறை மேலாளராக,
அரசுத்துறைத் தலைவர்களாக, அணுத்துறைத் தலைவராக,
அணு உலை அதிகாரியாக, தேர்தல்துறைத் தலைவராக,
ராக்கெட்டில் பறக்கும் ராகேஷ் சர்மாவாக
மட்டும்தானே இருக்கிறோம்!

கோயில்களில், வானொலியில்,
தொலைக்காட்சியில், கலை, இலக்கியத்தில்,
இதழ் உலகில் இசை, நாட்டியத்தில்,
நாடகம், திரைப்படத்தில் வைப்பகங்களில்,
எல்.ஐ.சி.யில் ஏ.ஜி.—யில்,
இரயில்வேயில், நடுவணரசு அலுவலகங்களில்-
என்று மட்டும்தானே இருக்கிறோம்?

இதற்குப் போட்டியா? இட ஒதுக்கீடா?
வேண்டாம்!

நீங்கள் அங்கேயே இருங்கள்! இங்கே
வேண்டாம்!
நீங்கள் நல்லவர்கள்; நாணயமானவர்கள்;

இங்கே வந்தால் எங்களைப் போல
பொய் சொல்லவும் கையூட்டு (லஞ்சம்)
வாங்கவும், ஊழல் செய்யவும், ஏமாற்றவும்,
ஒரு புட்டில் மதுவுக்காகப் படைத்துறைத்
கமுக்கத்தையே விற்கவும்,
மக்களை ஒடுக்கவும், கடனாளி ஆக்கவும்,
பட்டினியால் சாகடிக்கவும் கற்றுக்கொண்டு
விடுவீர்கள்.
ஆகவே. வேண்டாம் இந்த இட ஒதுக்கீடு!

நீங்கள் தமிழரில்லை; தெலுங்கரில்லை;
தனித்தனி தேசிய இனமில்லை;
நாம் எல்லாரும் இந்துக்கள்!
வாருங்கள், எங்களுக்குத் தொண்டுசெய்ய
ஓடி வாருங்கள்!
எங்களுக்கு அடிமையாயிருந்து,
புண்ணியம் தேடிக்கொள்ளுங்கள்!
'சுவர்க்கம்' கிடைக்கும்!
ஓடி வாருங்கள்! நாம் எல்லாரும் இந்துக்கள்!
நீங்கள் ஏழையாயிருந்தாலும், பசியில்
துடித்தாலும்,
கற்காவிட்டாலும் கவலையே வேண்டாம்!
எங்களுக்குத் தட்சணை மட்டும் தாருங்கள்!
நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.
ஏனென்றால் இந்த உலகம் கடவுளுக்குக்
கட்டுப்பட்டது!
கடவுள் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவர்!
மந்திரம் எங்களுக்குக் கட்டுப்பட்டது!
வேதம் அப்படிச் சொல்கிறது!
ஆகவே ஓடி வாருங்கள்;
நாம் எல்லாரும் இந்தியர்கள்;
இது இந்து 'ராஷ்டிரம்'!
ஜெய்ஹிந்த்! வந்தே மாதரம்!
வந்து ஏமாத்றோம்!!

(கடலூரில் 25-11-90-இல் நடந்த 'ஆதிக்க சாதி ஒழிப்பு மாநாட்'டில் பாடிய புதுப்பா)

---

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் கடந்த பேருணர்வாளராக நமக்கு வாய்த்துள்ளார்கள்.

019 எனவே, அவர்களை அரசும், மக்களும், உ. த. மு. க. வின் உறுப்பாக எண்ணி மயங்கும் நிலை உள்ளது.

020 உ. த. மு. க. பண்பாட்டுத் தளத்தின்-பண்பு என்னும் குன்றின் மீதெழுப்புதற்குரிய அரண் ஆகும.

021 இதனால், உ. த. மு. க. உலக மக்களின்-உழைக்கின்ற மக்களின் அரணாக விளங்கும் தகுதி பெற்று உயர்வதுறுதி.

022 எனவே, ஆர்வலர்களே, அன்பர்களே நம் கொள்கைகள் மக்களிடம் ஊன்றி வளர உழையுங்கள்.

023 உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? எண்ணுங்கள்; எழுதுங்கள்; செயல்படுங்கள்.

024 'தமிழ் நிலம்' தழைக்கத் துணை நில்லுங்கள்.

025 பாவலரேறு அவர்களின் உழைப்பை ஏழு கொள்கை வழி பெற்றுத் தமிழினம் உயரச் செய்யுங்கள்.

பறம்புக்குடி
10—12—91

தங்கள்
பறம்பை அறிவன்
துணைப் பொதுச் செயலாளர்
உ. த. மு. க.

---

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"தமிழகத்தில் இருக்கும் இலங்கை ஏதிலிகள் (அகதிகள்) தாங்களாக விரும்பித் தாய் நாட்டிற்குச் செல்லுகின்ற சூழ்நிலை அங்கு உருவாக வேண்டும். அவர்களைக் கட்டாயப்படுத்தி அனுப்பக்கூடாது. அப்படி ஒரு முயற்சி நடந்தால் பாட்டாளி மக்கள் கட்சி அதைத் தடுத்து நிறுத்தும். கிழக்கு வங்காளத்திலிருந்து நாள்தோறும ஏதிலியர்கள் இந்தியாவிற்கு வந்துகொண்டிருக்கிறார்கள்! நடுவணரசு அங்கு என்ன செய்கிறது?"

"பெரியார் தொண்டர்கள் ஒரு சிலர் மட்டும் தனித்து நின்று, தங்கள் ஆற்றலுக்கு மீறிச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களை ஒன்றிணைக்கவேண்டிய நேரம் நெருங்கிவிட்டது பா.ம.க. இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறது."

—நன்றி 'மக்கள்நேசன்' 6-11-91

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)
செலவு செய்தும், பார்வையிட்டும், ஆங்காங்குள்ள உழவர்களின் நேரடியான வாய்மூலங்களைக் கேட்டும், அவற்றை நன்றாக ஆய்ந்து, ஆண்டுதோறும், கர்நாடகம் தமிழ்நாட்டுக்கு 2050 கோடி கன அடி (அஃதாவது 205 டி.எம்.சி.) தண்ணீர் விடுமாறு இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராகத்தான் அது செல்லாது என்று கர்நாடகம் பங்காரப்பா சட்டமன்றம் ஒரு தீர்மானத்தையும் ஒரு புதுச்சட்டத்தையும் போட்டது.

அதன் பின்னர் நடந்த கதைதான் அனைவருக்கும் தெரியும்.

நடுவர் மன்றத் தீர்ப்பைத்தான் பங்காரப்பா கடுமையாக எதிர்த்தார். நடுவணரசு அதை உச்சநீதிமன்றக் கருத்துரைக்கு அனுப்பியது; அது நடுவர் மன்றத்தீர்ப்பு சரியென்றும், கர்நாடகம் அதையெதிர்த்துச் சட்டம் இயற்றியது தவறென்றும் கூறியது; நடுவணரசு அதை அரசிதழில் (கெஜட்டில்) வெளியிட்டது.

அது வெளிவந்த நாளிலிருந்து கர்நாடகத்தில் தமிழர்களுக்கு எதிராக வன்முறை, தீவைத்தல், முதலிய கொடுமைகள் கன்னடக் காடையர்களால் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன.

இது காவிரி நீர்த் தீர்ப்புக்கு எதிராக எழுந்த போராட்டம் அன்று என்பதை அது தொடங்கிய மூன்று, நான்கு நாள்கள் நிகழ்ச்சிகளே காட்டி விட்டன.

இது திட்டமிட்டுத் தமிழர்களின்மேல்; தமிழினத்தின்மேல் நடக்கின்ற ஓர் இனப்படுகொலையே ஆகும்.

ஆயிரக்கணக்கில் தமிழர்களின் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். பெண்களின் புடவைகளை அவிழ்த்துவிட்டு அவர்கள் அம்மணமாகவே விரட்டப்பட்டுள்ளனர்.

இக்கலவரங்களால் 2000-க்கும் மேற்பட்ட குடிசைகள் தீக்கிரையாகியுள்ளன. ஓரிலக்கத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் பாதுகாப்புத்தேடி தமிழகத்திற்குள் தங்கள் உடைமைகளையும் வீடு வாசல்களையும் விட்டுவிட்டுத் தங்கள் உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ள வந்துள்ளனர்; இன்னும் வந்த வண்ணமாகவே உள்ளனர்.

இந்தியாவின் உச்சநீதிமன்றத் தீர்ப்பைக் கொச்சைப் படுத்தியது பங்காரப்பாவின் மேலுள்ள கடுமையான குற்றமாகும். அதற்காகவே அவரைப் பல தண்டனைகளுக்கும் உள்ளாக்கலாம்.

அத்துடன் அவர் தூண்டிவிட்டதன் பேரிலேயே இக்கொடுமைகள் நிகழ்ந்தன என்று கர்நாடக முன்னாள் முதல்வர் இராமகிருட்டிண ஹெகடே கூறுவது மிகமிக உண்மையானதாகும்.

ஆட்சியில் ஊழலும் கட்சியில் எதிர்ப்பும் பங்காரப்பா தேடிக்கொண்ட இழிவுகளாகும்.

இவற்றைத் திசைதிருப்பவே இவர் இக்கலவரங்களைத் தூண்டிவிட்டார் என்று ஹெக்டே கூறியுள்ளார்.

1983-இல் இலங்கையில் தமிழர்களைச் சிங்களவர் கொடுமைப்படுத்தியதைப் போல், இங்கும் தமிழர்கள் கொடுமைக்கும் அழிவுக்கும் உள்ளாக வேண்டியுள்ளது பற்றித் தமிழ் நலம், தமிழர் நலம் கருதும் தலைவர்கள் சிந்திக்க வேண்டும்.

இத்தனை கொலை, கொள்ளை, தீவைப்பு, மாந்தர் இழிவு, பொருள் சேதங்கள் நடந்தும் நடுவணரசு, அதன் தலைமையமைச்சர் நரசிம்மராவ்... அவரின் அமைச்சர்கள், இந்திரா கட்சித் தலைவர்கள் எனப்படுவோர் ஒரு கண்டனம், சிறு வருத்தம், கண்டிப்பு - எதுவும் சொல்லவில்லையே...!

அதுதான் இந்தியா...! அதுதான் பார்ப்பனீய ஆட்சி...!

தமிழினம் அழிக்கப்படவேண்டும் என்பதுதான் நடுவணரசின் கோட்பாடு...! கொள்கை...! மறைமுக ஏற்பாடு...! எல்லாம்...!

ஒற்றுமையும் ஒருமைப்பாடும் வெறும் பேச்சளவில்தான்...!

இலங்கையில் தமிழர்கள் அழிக்கப்படுகையில், அ'து அயல் நாட்டுச் சிக்கல், நாம் தலையிடுவது கூடாது என்று ஞாயம் பேசினர், இங்குள்ள அரசியல் தலைவர்கள்...!

ஆனால், இங்கேயே ஒரு மாநிலத்து மக்கள் இன்னொரு மாநிலத்து மக்களை அழித்து ஒழிக்கிறார்களே-அதை என்னவென்று கூறி அமைதி சொல்வார்கள்...?

எல்லாவற்றுக்கும் விடை ஒன்றுதான் காவிரி நீர்ச் சிக்கலை இனச்சிக்கலாக மாற்றி விட்டார் பங்காரப்பா...!

இனி, தமிழினம் - தமிழர்கள் - தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளவேண்டியது தான்...! அதன் நோக்கம்-(இலட்சியம்)? இனி தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால்தான் தமிழர்கள் வாழமுடியும் என்ற நிலைக்குப் போவதுதான் என்றால், அதைக் காலமே இத்தகைய சூழல்களே உருவாக்கட்டும்.!

---

**சிந்தனைக்கு-68**

தேசிய இனப் போராட்டத்தில், முதலில் கருத வேண்டியது இனத்திற்கு ஏற்படும் தாக்கத்தையே! அரசியல் பொருளியல் தாக்கங்களை அதற்குப் பின்னர்தான் கவனிக்க வேண்டும்.

---

நூல்-அஞ்சல்

பெறுநர்

TN/MS(C)657